BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893

An international open access, peer- reviewed, refereed journal

தொல்காப்பியர் கூறும் ஆறறிவு உயிர்களும் சமணம் கூறும் உயிர் வகைகளும்

The six sensed beings described by Tolkappiar and the kinds of beings described in Jainism

ந. தட்சணாமூர்த்தி M.A (தமிழ்)

அஞ்சல்துறை கணக்கு அதிகாரி (ஓய்வு), பட்டுக்கோட்டை – 614602

N. Dakshinamoorthy M.A (Tamil)

Accounts Officer (Retired), Dept. of Posts, Pattukottai – 614602

Email: ndmoorthy30@gmail.com ORCHID ID: https://orcid.org/0009-0004-5055-1713

Abstract

One of the reasons given by the scholar Vaiyapuri Pillai, for his conclusion that Tolkappiyar was a Jain, was his research that the classification of beings made by Tolkappiyar was specific to Jainism. This article examines this in detail

Keywords: Tolkappiyar – Vaiyapuri Pillai – Jainism – Classification of beings– Five sensed beings– Six sensed beings

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பியர் சமணர் என்ற முடிவுக்கு வந்த அறிஞர் வையாபுரிப் பிள்ளை அந்த முடிவுக்கு வந்ததற்குக் கூறிய காரணங்களுள் ஒன்று தொல்காப்பியர் கூறிய உயிர்ப் பாகுபாடு சமணத்துக்கே உரியது என்ற அவரது ஆராய்ச்சி. அதைப் பற்றி இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது.

திறவுச் சொற்கள் : தொல்காப்பியர் – வையாபுரிப் பிள்ளை – சமணம் – உயிர்ப்பாகுபாடு – ஆறறிவு உயிர் – ஐயறிவு உயிர்.

முன்னுரை

தொல்காப்பியம் தமிழுக்குப் பேரிலக்கணமாய்த் திகழும் ஒரு பெருநூல். தமிழில் மிக ஆழமான ஆய்வுகளைச் செய்த அறிஞர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் தொல்காப்பியத்தை இயற்றிய தொல்காப்பியரின் சமயம் பற்றி ஆராய்ந்து அவர் சமணர் என்ற முடிவுக்கு வந்தார். அதற்கு அவர் கூறிய காரணங்களுள் முதலாவது, தொல்காப்பியச் சிறப்புப் பாயிரமானது தொல்காப்பியரைக் குறித்துக் கூறிய 'படிமையோன்' என்ற சொல் சமண நூல்கள் குறிப்பிடும் 'படிமா' என்பதில் இருந்து வந்தது என்ற அவரது ஆய்வு ஆகும். இது பொருந்தாது என்பது இக்கட்டுரை ஆசிரியர் எழுதிய, 'படிமையோன் எனப்பட்ட தொல்காப்பியர்' என்ற கட்டுரையில் ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளது[1]. இரண்டாவதாக வையாபுரிப் பிள்ளை அவர்கள் கூறிய காரணம் ஆறு வகை உயிர்கள் பற்றித் தொல்காப்பியர் கூறும் கருத்து சமண சமயத்துக்கே உரியது என்ற அவரது ஆய்வாகும். சில அறிஞர்கள் வையாபுரிப் பிள்ளையின் இக்கருத்தை மறுத்துக் கூறியுள்ளனர். எனினும் இது தொடர்பான சமண நூல்கள் ஆராய்ந்து கூறப்படவில்லை. சமண நூல்களையும் ஆராய்ந்து, முழுமையான முறையில் இதைப் பற்றி விரிவாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

தொல்காப்பியர் கூறும் உயிர்களின் வகைகள்

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே

நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே
புல்லு மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
நண்டும் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
மாவும் புள்ளும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
ஒருசார் விலங்கும் உளவென மொழிப"

(தொல். பொருள். 571 - 578)

என்று தொல்காப்பியர் கூறுகின்றார். வையாபுரிப் பிள்ளை அவர்கள் தனது 'தமிழ்ச் சுடர் மணிகள்' என்ற நூலில் தொல்காப்பியர் கூறும் இந்தப் பாகுபாடு சமணருக்கே உரியது என்று கூறி அதனால் தொல்காப்பியர் சமணர் என்ற முடிவை அடைகிறார். அவரின் முடிவைப் பற்றி ஆராயும் முன் சமண சமயம் உயிர்களைப் பற்றிக் கூறும் கருத்துகளைக் காண்போம்.

சமணரின் தத்துவக் கொள்கை

பொதுவாக, சமணரின் தத்துவக் கொள்கை ஒன்பது கருத்துகளை (நவ பதார்த்தம்) அடிப்படையாகக் கொண்டது (சில நூல்களில் இந்த எண்ணிக்கை மாறுபடக் கூறப்படுதலும் உண்டு). அவை 1. உயிர் (ஜீவன்), 2. உயிரற்றது (அஜீவன்), 3. நல்வினைப்பயன் (புண்ணியம்), 4. தீவினைப் பயன் (பாவம்), 5. வினைப்பயன் ஊற்று (ஆஸ்ரவம்), 6. வினைப்பயன் தடுப்பு (ஸம்வரை), 7. வினைப்பயன் உதிர்ப்பு (நிர்ஜரை), 8. வினைக்கட்டு (பந்தம்), 9. வீடுபேறு (மோட்சம்). இவற்றுள் உயிர் என்பதைப் பற்றி சமணம் கூறும் கருத்துகளே நமக்குத் தேவையானவை.

இந்துக்களுக்கு வேதமே அடிப்படை நூலாக இருப்பது போல, சமணருக்கு அடிப்படையாக இருப்பவை சமண ஆகம நூல்கள் ஆகும். மகாவீரரின் போதனைகளை அவர் காலத்துக்குப் பிறகு பின்வந்தோர் தொகுத்தவை இவை என்று கூறுவர். இவை அர்த்தமாகதி என்ற ஒருவகைப் பிராகிருத மொழியில் அமைந்தவை. திருமதி சிங்க்ளேர் ஸ்டீவன்சன் எழுதிய 'த ஹார்ட் ஆப் ஜைனிஸம்' (The heart of Jainism) என்ற நூலில் இருந்து வையாபுரிப் பிள்ளை சமணக் கருத்துகளை மேற்கோள் காட்டுகிறார். அந்த நூல் சமண ஆகமங்களின் சாரத்தை நன்கு எடுத்துக் கூறுகிறது.

சமணம் கூறும் உயிர்களின் வகைகள்

உயிர்களின் வகைகளைச் சமணம் பல வழிகளிலும் வகைப்படுத்துகிறது. உயிர்களை முதலில் சம்சார ஜீவன்கள் (உலகில் உள்ள உயிர்கள்), சித்தர்கள் என்று இருவகையில் பாகுபடுத்துகிறது[2] [3]. பின் ஆண், பெண், அலி என்று மூவகையாகப் பாகுபடுத்துகிறது. இவ்வாறே நான்கு வகையாக, ஐந்துவகையாக, ஆறுவகையாக என்று பதினான்கு வகை வரை பாகுபடுத்துகிறது[4]. இவற்றுள் பல அடிப்படையான பாகுபாடாக இல்லாமல் சற்று செயற்கையான முறையில் அமைந்துள்ளன. இவற்றுள் ஐந்து வகையாக அமைந்துள்ள பாகுபாடு மிகவும் அடிப்படையானது.

உயிர்களின் ஐவகைப் பாகுபாடு

இப்பாகுபாடு ஐம்பொறிகளை (பஞ்ச இந்திரியம்) அடிப்படையாகக் கொண்டது. கண், காது, மூக்கு, நாக்கு, மெய் ஆகிய ஐம்பொறிகள் மூலம் நாம் கண்டல், கேட்டல், நுகர்தல், சுவைத்தல், தொடுதல் ஆகிய ஐம்புலன் உணர்வைப் பெறுகிறோம். இந்த ஐம்பொறிகளையும் ஐம்புலன்களையும் பற்றி சமண ஆகமங்களுள் ஒன்றான 'ஸ்தானாங்க சூத்திரம்' இவ்வாறு கூறுகிறது:

"பஞ்ச இந்தி3யத்தா2 பண்ணத்தா, தம் ஜஹா – ஸோதிந்தி3யத்தே2, சக்கி2ந்தி3யத்தே2, கா3ணேந்தி3யத்தே2, ஜிப்3பி4ந்தி3யத்தே2, பா2ஸிந்தி3யத்தே2 | [5]

(பிராகிருதச் சொற்களின் சமஸ்கிருத வடிவங்கள், முறையே:- ஸ்ரோத்ர இந்த்ரியம், சக்ஷு இந்த்ரியம், க்ராண இந்த்ரியம், ஜிஹ்வா இந்த்ரியம், ஸ்பர்ஸ இந்த்ரியம், அத்தா – அர்த்தம்)

பொருள்:- இந்திரியங்கள் ஐந்து பொருள்கள் (புலன்கள்) கொண்டவை. அவையாவன – செவிப்புலன், கண் புலன், மூக்குப் புலன், நாப் புலன், மெய்ப் புலன்.

இதன் அடிப்படையில் சமணநூல்கள் உயிர்களை ஐந்து வகையாகப் பிரிக்கின்றன. ஒரு பொறி உயிர் (ஏக இந்திரிய ஜீவன்), இரு பொறி உயிர் (துவி இந்திரிய ஜீவன்), முப்பொறி உயிர் (திரி இந்திரிய ஜீவன்), நாற்பொறி உயிர் (சதுர் இந்திரிய ஜீவன்), ஐம்பொறி உயிர் (பஞ்ச இந்திரிய ஜீவன்) என்பவை அவை. ஸ்தானாங்க சூத்திரம் பின்வருமாறு கூறுகிறது:

“பஞ்சவிதா4 ஸம்ஸார ஸமாவண்ணகா3 ஜீவா பண்ணத்தா, தம் ஜஹா – ஏகிந்தி3யா, பே3இந்தி3யா, தேஇந்தி3யா, சஉரிந்தி3யா, பஞ்சேந்தி3யா” | [6]

பொருள்:- உலக வாழ்வில் உள்ள உயிர்கள் ஐந்து வகையாகும். அவையாவன – ஒரு இந்திரிய உயிர், இரு இந்திரிய உயிர், மூன்று இந்திரிய உயிர், நான்கு இந்திரிய உயிர், ஐந்து இந்திரிய உயிர்.

ஐந்து இந்திரிய உயிர்கள் நான்கு வகைப்படும் என சமணம் கூறுகிறது. சமண ஆகமங்களுள் ஒன்றான ‘ஜீவாஜீவாபிகம சூத்திரம்’ இவ்வாறு கூறுகிறது:

“ஸே கிம் தம் பஞ்சேந்தி3யா?

பஞ்சேந்தி3யா சஉக்3விஹா பண்ணத்தா, தம் ஜஹா – ணேரஇயா, திரிக்க2ஜோனியா, மணுஸ்ஸா, தே3வா” | [7]

பொருள்:- ஐந்து இந்திரிய உயிர்கள் எவை?

ஐந்து இந்திரிய உயிர்கள் நான்கு வகையாக உள்ளன. அவையாவன – நரகர், விலங்குகள், மனிதர், தேவர்.

சமண ஆகமங்கள் பலவற்றிலும் இக்கருத்துகள் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். அதாவது சமணக் கொள்கைப்படி விலங்கு ஐந்து இந்திரிய உயிர் (பஞ்சேந்திரிய ஜீவன்); மனிதனும் ஐந்து இந்திரிய உயிர்தான்; மனிதன் ஆறு இந்திரிய உயிர் இல்லை. ஆறு இந்திரிய உயிர் என்று சமணத்தில் எதுவும் இல்லை.

சமணத்தின் அறுவகை உயிர்ப் பாகுபாடு:

சமணம் உயிர்களை இரண்டு வகை முதல் பதினான்கு வகை வரை பிரிப்பதில் ஆறு வகையாகப் பிரிக்கும் முறையும் ஒன்று. அதைப் பற்றி அறியும் முன் ஓரறிவு உயிர்கள் பற்றிச் சமணம் கூறுவதை அறிய வேண்டும். வைதிக மரபின்படி நிலம், நீர், தீ, காற்று ஆகியவை உயிரற்றவை. ஆனால் சமணத்தின்படி இவை உயிருள்ளவை. சமணர் கொள்கைப்படி ஒரு கல்லுக்கு உயிர் உண்டு; ஒரு நீர்த்துளிக்கு உயிர் உண்டு; எரியும் தீயினுக்கு உயிர் உண்டு; வாயுவுக்கு உயிர் உண்டு; இவை தொடு உணர்வு ஒன்று மட்டுமே கொண்ட ஓரறிவு உயிர்கள் (ஏக இந்திரிய ஜீவன்). இவை தவிர புல், மரம் போன்றவையும் தொடு உணர்வு ஒன்று மட்டுமே கொண்ட ஓரறிவு உயிர்கள். இவ்வாறு சமணக் கொள்கைப்படி ஓரறிவு உயிர்கள் ஐவகையாகும். அவை நில உடம்பு உயிர் (பிருதிவி காய), நீர் உடம்பு உயிர் (அப் காய), தீ உடம்பு உயிர் (தேயு காய), வளி உடம்பு உயிர் (வாயு காய), தாவர உடம்பு உயிர் (வனஸ்பதி காய) ஆகும். இவை இயங்கும் தன்மை இல்லாதவை (தீ மற்றும் வாயுவின் இயக்கம் தானாக இயங்கும் தன்மையினால் அல்ல என்பது சமணர் கொள்கை). நிலைத் திணை என்று தமிழில் கூறப்படுவதை இவை ஒத்தவை.

இந்த ஓரறிவு உயிர்கள் தவிர்ந்த மற்ற இரண்டு அறிவு முதல் ஐந்து அறிவு வரை கொண்ட உயிர்கள் இயங்கக் கூடியவை (இயங்கு திணை). இவை இயக்க உடம்பு உயிர்கள் (திரஸ காய) எனப்படும். ஓரறிவு உயிர்கள் ஐவகையுடன் இந்த இயக்க உடம்பு உயிர்களை ஒரு வகையாகச் சேர்த்து அறுவகை உயிர்கள் என்று பாகுபடுத்துவது சமணத்தில் ஒருவிதப் பாகுபாடாகும்.

ஸ்தானாங்க சூத்திரம் இவ்வாறு கூறுகிறது:

"சஜ்ஜீவணிகாயா பண்ணத்தா, தம் ஜஹா புட4விகாஇயா, ஆஉகாஇயா, தேஉகாஇயா, வாஉகாஇயா, வணஸ்ஸஇகாஇயா, தஸகாஇயா" [8]

(சமஸ்கிருதத்தில் இப்பெயர்கள், முறையே: ப்ருத்வி காயிக, அப் காயிக, தேஜஸ் காயிக, வாயு காயிக, வனஸ்பதி காயிக, த்ரஸ காயிக)

பொருள் :- உடலை உடைய உயிர்கள் ஆறு வகையாக உள்ளன. அவையாவன – நில உடல் உயிர்கள், நீர் உடல் உயிர்கள், தீ உடல் உயிர்கள், வளி உடல் உயிர்கள், தாவர உடல் உயிர்கள், இயங்கும் உயிர்கள்.

பிற சமண ஆகமங்களிலும் இது கூறப்பட்டுள்ளதைக் காணலாம். சமண நூல்களில் பல இடங்களில் இந்த அடிப்படையில் ஆறு வகை உயிர்கள் என்று கூறப்படுவதைக் காணலாம். அறுவகை உயிர்கள் குறித்து மகாவீரர் உபதேசித்தார் என்று ஆசாரங்க சூத்திரம் குறிப்பிடுவதை வையாபுரிப் பிள்ளை எடுத்துக் காட்டுகிறார்[9]. அது இங்கு கூறப்பட்ட அறுவகை உயிர்ப் பாகுபாடே தவிர அதற்கும் ஓரறிவு முதல் ஆறறிவு வரை பகுக்கும் பாகுபாட்டுக்கும் தொடர்பில்லை.

நன்னூலின் உயிர்க் கொள்கை

தொல்காப்பியர் இப்புலன் உணர்வை அறிவு என்ற சொல்லால் குறிப்பிட்டு ஓரறிவு, இரண்டறிவு என்ற வரிசையில் குறிப்பிடுகிறார். நன்னூலை இயற்றிய பவணந்தி முனிவர் சமணர். தனது நூலின் கடவுள் வாழ்த்தில் அவர் அருகனை வாழ்த்திப் பாடுவதால் இது தெளிவாக அறியப்படும் உண்மை. அவரும் இவ்வாறே புலன் உணர்வை அறிவு என்ற சொல்லால் குறிப்பிட்டு ஓரறிவு, ஈரறிவு என்ற வரிசையில் வகைப்படுத்துகிறார். அவர் தனது நூலில் பின்வருமாறு கூறிகிறார்.

"மெய்ந்நா மூக்கு நாட்டஞ் செவிகளின்
ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டுமே லுணர்தலின்
ஓரறி(வு) ஆதியா உயிர்ஐந் தாகும்
புல்மரம் முதலஉற்று அறியும்ஓர் அறிவுயிர்
முரள்நந்(து) ஆதிநா அறிவொ(டு)ஈ ரறிவுயிர்
சிதல்எறும்(பு) ஆதிமூக் கறிவின்மூ வறிஉயிர்
தும்பிவண்(டு) ஆதிகண் ணறிவின்நா லறிஉயிர்
வானவர் மக்கள் நரகர் விலங்குபுள்
ஆதிசெவி யறிவோ(டு) ஐயறி உயிரே"

(நன். சூ. 444- 449)

இவ்வாறு பவணந்தி முனிவர் சமணக் கொள்கைப்படி உயிர்களை ஐவகையாகப் பிரித்து விலங்கும், மக்களும் ஐயறிவு உயிர் என்று கூறுகிறார். ஆனால் தொல்காப்பியரோ உயிர்களை ஆறுவகையாகப் பிரித்து இது நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்திய விதம் என்று கூறி விலங்குகள் ஐயறிவு உயிர் என்றும் மக்கள் ஆறறிவு உயிர் என்றும் தனது கூற்றாகக் கூறி அதன்பின், ஒரு சில விலங்குகளுக்கும் ஆறறிவு உண்டு என்று சொல்வார்கள் என மேலும் கூறியிருக்கிறார்.

வையாபுரிப் பிள்ளையின் வாதம்

சமணத் தத்துவம் பற்றியும் ஐந்து வரையிலான அறிவு கொண்ட உயிர்கள் பற்றிச் சமணம் கூறும் கருத்துகளையும் எடுத்து விளக்கும் வையாபுரிப்பிள்ளை அவர்கள் மேலும் கூறுகையில், "ஐயறிவுயிர் ஒரு சாராரது கருத்துப்படி இருவகைப்படும்: மனமில்லாதன (அஸம்ஜ்ஞி), மனமுள்ளன (ஸம்ஜ்ஞி) என. விலங்கும் ஒருசார் மக்களும் அஸம்ஜ்ஞியாம். மக்கள் தேவர் நரகர் என்ற இத்திறத்தினர் ஸம்ஜ்ஞியாம்" என்று அவர் குறிப்பிடுகிறார். அவர் உயிர் வகைகளைக் கூறும் தொல்காப்பியச் சூத்திரங்களை எடுத்துக் காட்டி "இங்கே காட்டப்பட்ட சூத்திரங்களின் பொருள் ஜைன சமயக் கொள்கையோடு முற்றும் பொருந்துவது காணலாம். மக்களை ஆறறிவுயிர் என்பது அந்தச் சமயத்தினருள் ஒருசாராரது கொள்கையாதலின் அது பெருவரவிற்றாய்க் காணப்படுதலில்லை" என்று கூறுகிறார்[10]. அதாவது சமணரில் ஒரு சாரார் மக்களை ஆறு இந்திரிய உயிர் – அதாவது ஆறறிவு உயிர் எனக் கொண்டனர் என்றும் இது தொல்காப்பியர் கொள்கையோடு முற்றிலும் பொருந்துகிறது என்றும் அவர் கூறுகிறார். அந்த ஒரு சாரார் யார் என்பதையோ அதற்கான ஆதாரத்தையோ அவர் குறிப்பிடவில்லை.

சமணத்தில் திகம்பரர், சுவேதாம்பரர், ஸ்தானகவாசி ஆகிய பிரிவுகள் முதன்மையானவை. இவர்களது கொள்கைகள், நடைமுறைகள் ஆகியவற்றில் சிற்சில வேறுபாடுகள் இருப்பினும் அடிப்படைகளில் மாற்றம் இரா. மகாவீரரின் போதனைகளாகத் தொகுக்கப்பட்ட ஆகமங்கள் பற்றி மேலே கூறப்பட்டது.

அவையே தற்காலத்தில் முழுமையான முறையில் கிடைப்பவை (மறைந்து போன 12 ஆம் அங்க ஆகமம் தவிர). அந்தச் சமண ஆகமங்களில் உள்ள கருத்துகளே வையாபுரிப் பிள்ளை அவர்களால் முதலில் கூறப்பட்டவை. அவர் ஒரு சாரார் கருத்தாகக் கூறும் இந்த ஸம்ஜ்ஞி, அஸம்ஜ்ஞி என்ற இருவகைப் பிரிவும் அதே ஆகமங்களிலேயே கூறப்பட்டுள்ளன. சமண ஆகமங்களுள் ஒன்றான 'சமவாயாங்க சூத்திரம்' உயிர்களைப் பதினான்கு வகையாகப் பிரிக்கிறது. இதில் ஐயறிவு உயிர்களை 'ஸம்ஜ்ஞி', 'அஸம்ஜ்ஞி' என்று பிரிக்கிறது[11]. இதையும் மற்ற பிரிவுகளையும் திருமதி சிங்க்ளேரும் தன் நூலில் தெளிவாக விளக்கியுள்ளார்[12]. சமண ஆகமங்களில் உள்ள கருத்துகளைச் செறிவாகவும் நிரலாகவும் தொகுத்துக் கூறும் 'தத்துவார்த்த சூத்திரம்' என்பது ஆகமங்களுக்குப் பிறகு தோன்றியது. சமஸ்கிருதத்தில் அமைந்துள்ள இது சமணத்தின் எல்லாப் பிரிவினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பெரிதும் போற்றப்படுவது. இதுவும் உயிர்வகைகளைப் பற்றி மேலே கூறியவாறே கூறுகின்றது; வேறுபாடாக அல்ல. எனவே இது ஒரு சாரார் கொள்கை என வையாபுரிப் பிள்ளை அவர்கள் கூறுவது பொருந்தவில்லை.

சமணம் கூறும் பிராணன்களும் பரியாப்திகளும்

'ஸம்ஜ்ஞி' என்பது மனத்தால் உணரும் ஆற்றலுடைய உயிர்களைக் குறிக்கிறது. இந்த மனபல ஆற்றல் என்பது சமணத்தில் உயிர்களுக்குரியதாகக் கூறப்பட்டுள்ள பத்து ஆற்றல்களில் (பிராணன் அல்லது பலம்) ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது[13] [14]. இந்தப் பத்து ஆற்றல்கள் பின்வருமாறு. 1 - 5. இந்திரிய பிராணன் ஐந்து 6. உடல் பல (காயபல) பிராணன் 7. பேச்சுபல (வாக்பல) பிராணன் 8. மனபல பிராணன் 9. சுவாசப் பிராணன் 10. ஆயுள் பிராணன். உயர்ந்த உயிர்கள் இந்த பத்து பிராணன்களையும் பெற்றிருக்கும். எந்த ஒரு உயிரும் குறைந்தது நான்கு பிராணன்களைக் கொண்டிருக்கும் (உடல்பல பிராணன், சுவாசப் பிராணன், ஒரு இந்திரிய பிராணன், ஆயுள் பிராணன்). நான்கு இந்திரியம் வரைக் கொண்ட உயிர்களுக்கு மன பல பிராணன் இல்லை. ஐந்து இந்திரியம் கொண்ட உயிர்கள் சில மனபல பிராணன் கொண்டவை (ஸம்ஜ்ஞி); சில அது அற்றவை (அஸம்ஜ்ஞி). ஐந்து இந்திரிய உயிர்கள் நான்கு வகைகளுள் நரகர், மனிதர், தேவர் ஆகியோர் மனபல பிராணன் கொண்டவர்கள். விலங்குகளுள் பசு, எருமை, மற்றும் பிற வீட்டு விலங்குகள் ஆகியவை மனபல பிராணன் கொண்டவை. தவளை, மீன் போன்றவை மனபல பிராணன் அற்றவை.

பத்து பிராணன் என்று கூறப்படுவதை வேறு வகையில் ஆறு பரியாப்திகள் என்றும் சமணம் கூறும்[15]. பரியாப்தம் என்பது நிறைவடைவதைக் குறிக்கும். நிறைவடைய வேண்டிய பலங்கள் பரியாப்திகள் எனப்படும். இந்த முறையில் இந்திரிய பிராணன்கள் ஐந்தையும் ஒன்றாக்கி மற்ற ஐந்தையும் அதனுடன் சேர்த்து மொத்தம் ஆறு வகைப் பரியாப்திகளாகக் கூறுவர். பிராணன்களில் ஆயுள் பிராணன் என்று கூறப்பட்டதற்கு மாற்றாக பரியாப்திகளில் ஆகார பரியாப்தி (உண்ணுதல்) என்பது கூறப்பட்டுள்ளது. பிராணன்கள், பரியாப்திகளில் மற்றவை முற்றிலும் ஒத்தவை. எனவே ஆயுள் பிராணனும் ஆகார பரியாப்தியும் இணையானவை என்று கருதத் தகும். தனக்குரிய பரியாப்திகளை முழுமையாகப் பெற்ற உயிர்கள் பரியாப்த உயிர்கள் என்றும் அவ்விதம் பெறாதவை அபரியாப்த உயிர்கள் என்றும் சமணம் கொள்கிறது. சமணம் ஒன்று முதல் ஐந்து வரை இந்திரியம் கொண்ட ஐவகை உயிர்கள் ஒவ்வொன்றையும் பரியாப்த உயிர், அபரியாப்த உயிர் என்று இரண்டாகப் பிரித்து மொத்தம் பத்து வகையாகக் கொள்கிறது[16].

சமணத்தின்படி மனம் என்பது ஒரு பிராணனே, இந்திரியம் அல்ல!

உயிர்களைப் பதினான்கு வகையாகப் பிரிக்கும் போது மனபல பிராணன் கொண்டவைகளை ஸம்ஜ்ஞி என்றும் மனபல பிராணன் அற்றவைகளை அஸம்ஜி என்றும் முன் கூறியபடி சமவாயாங்க சூத்திரம் வகைப்படுத்துகிறது[17]. இவ்வாறு, மனம் என்பதை சமணம் ஒரு பிராணனாகவும் பரியாப்தியாகவும் கூறுகிறதே தவிர ஒரு இந்திரியமாகக் கூறவில்லை. புலன்கள் மூலம் அறிவதைக் குறிப்பிடும் போது சமவாயாங்க சூத்திரம் மனதால் அறிவதையும் சேர்த்துக் கூறி அது இந்திரியம் இன்றி அறியப்படுவதாகக் கூறுகிறது.

“சவ்விஹே அத்து2க்3க3ஹே பண்ணத்தே, தம் ஜஹா ஸோஇந்தி3ய அத்து2க்3க3ஹே, சக்கு2இந்தி3ய அத்து2க்3க3ஹே, கா4ணேந்தி3ய அத்து2க்3க3ஹே, ஜிபி3ந்தி3ய அத்து2க்3க3ஹே, பா2ஸிந்தி3ய அத்து2க்3க3ஹே, நோஇந்தி3ய அத்து2க்3க3ஹே” / [18]

(அத்துக்கஹே – அர்த்த அவக்ரஹ)

பொருள்:- பொருள் உணர்வைப் பெறும் வழிகள் ஆறு ஆகும். அவையாவன – காது இந்திரிய வழிப் பொருள் உணர்வு, கண் இந்திரிய வழிப் பொருள் உணர்வு, மூக்கு இந்திரிய வழிப் பொருள் உணர்வு, நாக்கு இந்திரிய வழிப் பொருள் உணர்வு, மெய் இந்திரிய வழிப் பொருள் உணர்வு, இந்திரியம் இன்றி (மனம் மூலம்) பெறும் பொருள் உணர்வு.

தத்துவார்த்த சூத்திரமும் இவ்வாறே மனத்தால் உணரப்படுவதை இந்திரியம் அல்லாததன் மூலம் உணரப்படுவதாகக் கூறுகிறது.

“ஸ்ருதம் அநிந்த்ரியஸ்ய” [19]

பொருள்:- சுருதிகளை (ஆகமப் பொருளை) அறிவது இந்திரியம் அல்லாததற்கு (மனத்துக்கு) உரியது.

எனவே மனம் என்பது ஒரு இந்திரியம் அல்ல என்று சமணம் கொள்வதைத் தெளிவாக அறிய முடிகிறது. சமணம் மனிதனை ஐந்து இந்திரிய உயிராகக் கொண்டு கூடுதலாக மனபல பிராணன் உடையவன் என்று கொள்கிறது. மேலும், விலங்குகளில் சிலவும் மனபல பிராணன் உடையனவாக அது கொள்கிறது. தொல்காப்பியர் மக்களை ஐந்து இந்திரிய உயிராகக் குறிப்பிடவில்லை; ஆறாவது இந்திரியமான மனம் என்பது கொண்ட ஆறறிவு உடையவன் என்று குறிப்பிட்டுள்ளார். எனவே தொல்காப்பியர் கூறுவதும் சமணம் கூறுவதும் வேறுபட்டவை. வையாபுரிப்பிள்ளை அவர்கள் கூறுவது போல தொல்காப்பியம் கூறுவது சமணக் கொள்கையோடு முற்றிலும் பொருந்துவது அன்று, வேறுபட்டது என்பது தெளிவாகும்.

தொல்காப்பியர் கூறுவது எந்த மரபைச் சார்ந்தது?

வையாபுரிப் பிள்ளை, “ஈண்டு எழுதியவற்றால் இவ்வகை உயிர்ப்பாகுபாடு ஜிநதர்மம் ஒன்றற்கே பூர்வத்தில் உரியதாயிருந்தமை தெளியலாகும். பிற சமயங்களுக்கு உரிய பொருட்பாகுபாட்டில் இது காணப்படாமை ‘ஸர்வதரிசன ஸங்கிரகம்’ நோக்கி அறிந்து கொள்க” என்று குறிப்பிடுகிறார்[20]. ‘ஸர்வ தரிசன ஸங்கிரகம்’ என்பது பல சமயங்கள், சமயப்பிரிவுகள் ஆகியவற்றின் கொள்கைகளைத் தொகுத்துக் கூறும் ஒரு நூல். இது பல்வேறு சமயங்களின் முக்கிய கொள்கைகளைச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறுவதேயன்றி அச்சமயங்களின் எல்லாக் கருத்துக்களையும் கூறுவது அன்று. எனவே அதில் ஒரு சமயம் பற்றிக் கூறும் இடத்தில் ஒரு கருத்து காணப்படாவிடில் அந்தச் சமயத்தில் அந்தக் கருத்து இல்லை எனக் முடிவுக்கு வரும் வையாபுரிப் பிள்ளையின் அணுகுமுறை ஏரணத்துக்கு (logic) எதிரானது. இனி, தொல்காப்பியர் கூறும் உயிர்ப்பாகுபாடு சமணத்துக்கு மாறுபட்டது என்றால் அது எதைச் சார்ந்தது என்பது ஆராயத் தக்கது.

வைதிக சாங்கியக் கொள்கை

வேதங்களின் வழியில் வந்த நெறி வைதிகம் எனப்படும். வைதிகம் என்பது இறை வழிபாடு, சடங்குகள், நெறிமுறைகள், தத்துவக் கொள்கைகள் முதலிய பலவற்றைத் தன்னகத்தே கொண்டது. வைதிகத்துக்கு அடிப்படையாக, தத்துவக் கொள்கைகள் அமைந்துள்ளன. வைதிக தத்துவக் கொள்கைகள் ஆறு உள்ளன. இவற்றை ஆறு தரிசனங்கள் என்பர். இவற்றுள் முதலாவதும்,

Volume 2, Issue 2 Apr – Jun 2026 E - ISSN: 3139 -1893

மிகவும் பழமையானதும் சாங்கிய தரிசனமாகும். மிகப் பழங்காலத்தில் இதைத் தோற்றுவித்தவர் கபில முனிவர். பகவத்கீதையில் கிருஷ்ணர் பரம்பொருள் நிலையில் நின்று உலகில் உள்ளவற்றின் ஒவ்வொரு வகையிலும் உயர்ந்ததாக, தானே இருப்பதாகக் கூறும்போது, 'சித்தர்களில் நான் கபில முனியாக இருக்கிறேன்' என்று கூறுகிறார் (பக. கீதை. 10.26). அத்தகைய பெருமை மிக்க கபில முனிவரின் சாங்கிய தரிசனமானது பிரபஞ்சத்தின் அடிப்படைகளான பிரகிருதி, புருஷன் என்பவற்றையும் பிரபஞ்சத்தின் தோற்றம், பஞ்ச பூதங்களும் ஐம்புலன்களும் மனமும் உயிர்களும் தோன்றுதல், மனத்தின் தன்மை, உயிர்களின் கூறுபாடுகள் முதலியவற்றையும் பற்றி விவரிக்கிறது. இவற்றையே வைதிகம் தன் அடிப்படையாகக் கொள்கிறது. கபிலர் இயற்றிய நூல் மறைந்துவிட்டது. அக்கொள்கையை விளக்கி பிற்காலத்தில் எழுதப்பட்ட, 'சாங்கிய காரிகை' என்ற நூலே தற்காலத்தில் கிடைக்கிறது.

சாங்கிய காரிகையில் பதினொரு இந்திரியங்கள் கூறப்பட்டுள்ளன. புத்தி இந்திரியங்கள் என்று கண், காது, மூக்கு, நாக்கு, மெய் ஆகிய ஐம்பொறிகள் கூறப்பட்டுள்ளன. கர்ம இந்திரியங்கள் என்று வாய், கை, கால், குதம், பிறப்புறுப்பு என்ற ஐந்து உறுப்புகள் கூறப்பட்டுள்ளன.

“புத்3தீ4ந்த்3ரியாணி சக்ஷு: ஶ்ரோத்ர க்4ராண ரஸந த்வகாக்2யாநி |

வாக் பாணி பாத3 பாயூ பஸ்தா2க்2ய கர்மேந்த்3ரியாண்யாஹு:” || (சாங். காரி. 26)

பொருள்:- புத்தி இந்திரியம் எனப்படுபவை கண், காது, மூக்கு, நாக்கு, மெய் ஆகும். கர்ம இந்திரியங்கள் எனப்படுபவை வாய், கை, பாதம், குதம், பிறப்புறுப்பு ஆகும்.

மேலும் அது பதினொன்றாவதாக மனம் என்ற இந்திரியத்தைக் கூறுகிறது.

“உப4யாத்மகம் அத்ர மந: ஸங்கல்பகம் இந்த்3ரியம் ச ஸாத4ர்ம்யாத் |

கு3ணபரிணாம விஶேஷாந் நாநாத்வம் பா3ஹ்ய பே4தா3ஸ் ச” || (சாங். கா. 27)

பொருள்:- மனம் என்பது இந்த இருவித இந்திரியங்களின் தன்மையும் கொண்டது. சிந்தித்து முடிவெடுப்பது. ஒத்த தன்மை காரணமாகத் தானே ஒரு இந்திரியம் ஆவது. புலன்களிலும் புறத்திலும் உள்ள பலவகையான குண மாற்றத் தன்மைகளால் மனம் மிகப்பலவான செயல்களைச் செய்வதாக உள்ளது.

மனுதர்ம நூல் கூறுவது:

மனுதர்மநூல் இதைப் பின்பற்றி இந்திரியங்கள் பதினொன்று என்றும் ஞானேந்திரியங்களாக ஐந்து இந்திரியங்களையும் கர்மேந்திரியங்களாக ஐந்து இந்திரியங்களையும் மனம் என்ற ஒரு இந்திரியத்தையும் குறிப்பிடுகிறது.

“ஏகாத3ஶ இந்த்3ரியாண்யாஹுர் யாநி பூர்வே மநீஷிண: |

தாநி சம்யக் ப்ரவக்ஷ்யாமி யதா2வத்3 அநுபூர்வஶ ||” (மனு. 2.89)

பொருள்:- பதினொரு இந்திரியங்கள் என்று முற்காலத்தில் ஞானிகளால் கூறப்பட்டவற்றை நான் அவ்விதமே முறைப்படி வரிசையாகக் கூறுகிறேன்.

“ஶ்ரோத்ரம் த்வக் சக்ஷுஷீ ஜிஹ்வா நாஸிகா ச ஏவ பஞ்சமீ |

பாயு உபஸ்த2ம் ஹஸ்த பாத3ம் வாக் ச ஏவ த3ஶமீ ஸ்ம்ருதா” || (மனு. 2. 90)

பொருள்:- காது, தோல், கண், நாக்கு, ஐந்தாவதாக மூக்கு, குதம், பிறப்புறுப்பு, கை, பாதம், பத்தாவதாக வாய் என பத்து இந்திரியங்கள் கூறப்பட்டுள்ளன.

“புத்3தீ4ந்த்3ரியாணி பஞ்ச ஏஷாம் ஶ்ரோத்ராதீ3ந்யநுபூர்வஶ:|

கர்ம இந்த்3ரியாணி பஞ்ச ஏஷாம் பாயு ஆதீ3நி ப்ரசக்ஷதே” || (மனு. 2. 91)

பொருள்:- புத்தி இந்திரியங்கள் ஐந்து. அவை காது முதல் கூறப்பட்ட ஐந்தாகும். கர்ம இந்திரியங்கள் ஐந்து. அவை குதம் முதலாக கூறப்பட்ட ஐந்து ஆகும்.

“ஏகாத3ஶம் மநோ ஜ்ஞேயம் ஸ்வகு3ணேந
உப4ய ஆத்மகம் |
யஸ்மின் ஜேதே ஜிதாவ் ஏதௌ ப4வத:
பஞ்சகௌ க3ணௌ” || (மனு. 2.92)

பொருள்:- பதினொன்றாம் இந்திரியம் மனம் என அறியவேண்டும். அது தன் தனித்தன்மையால் இருவகை இந்திரியங்களின் தன்மையையும் கொண்டுள்ளது. எனவே அது வெற்றி கொள்ளப்பட்டால் மற்ற இரண்டு வகையான ஐயைந்து இந்திரியங்களும் வெற்றி கொள்ளப்படும்.

இவ்வாறு மனத்தை ஒரு இந்திரியமாக சாங்கிய காரிகையும் மனுதர்ம நூலும் கூறுகின்றன.

பகவத் கீதை கூறுவது:

ஞானேந்திரியங்கள் எனப்படும் புத்தி இந்திரியங்கள் ஐந்துடன் மனத்தை ஆறாவது இந்திரியமாகச் சேர்த்துக் கூறும் மரபும் உள்ளது. பகவத் கீதை மனத்தை ஆறாவது இந்திரியமாகக் கூறுகிறது.

“மமைவாம்ஶோ ஜீவலோகே ஜீவபூ4த:
ஸநாதன: |
மந: ஷஷ்டா2நீந்த்3ரியாணி ப்ரக்ருதிஸ்
தா2நி கர்ஷதி” || (பக. கீதை. 15.7)

பொருள்:- என்னுடைய (பரமாத்மாவின்) ஒரு கூறாக ஜீவ உலகத்தில் நிலை பெற்றிருக்கும் ஜீவாத்மா (மனிதனாகப் பிறக்கும் போது) பிரகிருதியில் உள்ளவையும், மனத்தை ஆறாவதாகக் கொண்டவையுமான ஆறு இந்திரியங்களையும் எடுத்துக் கொண்டு பிறக்கிறது.

“ஶ்ரோத்ரம் சக்ஷு: ஸ்பர்ஶநம் ச ரஸநம்
க்3ராணமேவ ச |
அதி4ஷ்டா2ய மநஶ்சாயம்
விஷயாநுபஸேவதே”||(பக.கீதை.15.9)

பொருள்:- காது, கண், மெய், நாக்கு, மூக்கு, மனம் இவற்றில் நிலைகொண்டு ஜீவன் விஷயங்களை அனுபவிக்கிறது.

அதாவது மனத்தை ஆறாவது இந்திரியமாக – ஆறாம் அறிவாக – அது கூறுகிறது. இந்த மரபைப் பின்பற்றியே இன்றும் ‘மனிதன் ஆறறிவு படைத்தவன்’ என்று கூறும் கூற்று மக்களிடையே வழங்குவதைக் காண்கிறோம். மனம் என்பது ஒரு இந்திரியம் அல்ல என்று கொள்ளும் சமணத்துக்கு மாறாக வைதிகம் ஐந்து இந்திரியங்களுடன் ஆறாவது இந்திரியமாக – ஆறாவது அறிவாக மனத்தைக் கொள்கிறது.

சாங்கிய காரிகை கூறும் உயிர்வகை

சாங்கிய காரிகை உயிர்களின் வகைகளை இவ்வாறு கூறுகிறது:

“அஷ்டவிகல்போ தே3வஸ்
தைர்யக்3யோநஶ் ச: பஞ்சதா4 ப4வதி |
மாநுஷ்யஶ்சைக வித4: ஸமாஸதோ
பௌ4திக: சர்க3:” || (சாங். காரி. 53)

பொருள்:- தேவர்கள் எட்டு வகை. கீழான உயிர்கள் (தைர்யக்யோநஜ) ஐந்து வகை. மனிதர்கள் ஒரே ஒரு வகை. இதுவே உயிர்கள் வளர்ச்சியின் சுருக்கமான வகைப்பாடு ஆகும்.

பழங்காலத்தில் சூத்திர நூல்கள் போன்ற நூல்களில் விரிவாகக் கூறாமல் சுருக்கமாகக் கூறும் போக்கைப் பல இடங்களில் காணலாம். ஐந்து வகை என இவ்வாறு குறிப்பிட்ட சாங்கிய காரிகை அவை என்னென்ன என்று குறிப்பிடவில்லை. அதை ஆசிரிய, மாணவ மரபில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு விளக்கிக் கூறுவார்கள். நம் தமிழ் இலக்கண நூல்களிலும் இது போல நிறைய காணலாம். எழுத்துகள் அகரம் முதல் னகரம் வரை முப்பது என்று கூறும் தொல்காப்பியம் அவை என்னென்ன என்று கூறவில்லை. ஆசிரியர்களே அதை விளக்குவார்கள். இங்கு ‘தைர்யக்யோனஜ’ உயிர்களின் ஐந்து வகைகள் என்னென்ன என்பதைப் பற்றி பிற்கால உரையாசிரியர்கள் தங்கள் உரைகளில் கூறுகிறார்கள். அனைவரும் தாவரத்தில் தொடங்கி விலங்கில் முடிக்கின்றனர். இதனால் சாங்கிய காரிகை கூறும் ஐவகை என்பது ஒன்று முதல் ஐந்து அறிவு வகைக் கொண்ட உயிர்களையே குறிக்க வேண்டும் எனத் தெரிகிறது. எனினும் உரையாசிரியர்கள் இடைநிலைகளாகக் கூறுபவைகளில் மாறுபாடுகள் உள்ளன. எல்லாப் பழங்கால நூல்களின் உரைகளிலும் இவ்வாறு உள்ளவைகளைக் காணலாம்.

தொல்காப்பியக் கருத்துகளை விளக்கும்போது கூட சில இடங்களில் உரையாசிரியர்கள் ஒருவருக்கொருவர் முரண்படக் கூறுவது ஒப்புநோக்கத் தக்கது. ‘தாவரங்கள், ஊர்வன, பறவைகள், காட்டு விலங்குகள், வீட்டு விலங்குகள்’ என்ற ஐவகையை கௌடபாதர் கூறுகிறார். நாராயண தீர்த்தர் கூறுவது இதைவிட ஓரளவு பொருத்தமாக உள்ளது. ‘தாவரங்கள், பூச்சிகள், ஊர்வன (reptiles), பறவைகள், விலங்குகள் (ஸ்தா$_2$வர, கீட$_1$, ஸர்ப, பக்ஷி, பஶு) என்பவை அவர் கூறும் ஐவகைப் பிரிவுகள்[21]. தொல்காப்பியர் கூறுவது போல உயிர்களின் அறிவின் எண்ணிக்கைப்படி வகைப்படுத்தும் கோணத்தில் அவர்கள் அணுகவில்லை எனத் தெரிகிறது. ஐவகைக் கீழ்நிலை உயிர்கள் என்னென்ன என்பதில் கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் இந்த ஐவகையும், மனிதனும் சேர்ந்து ஆறுவகை உயிர்கள் என்பது தொல்காப்பியர் கூறும் வகைப்பாட்டுடன் முற்றிலும் பொருந்துகின்றது.

மனிதனும் மனமும்

இயற்கையில் விலங்குகளுக்கும் சிந்திக்கும் திறன் ஓரளவு இருப்பதைக் காண்கிறோம். சில விலங்குகளுக்கு அது சற்று மிகுதியாகவும் இருப்பதைக் காண்கிறோம். ஆனால் மனிதனின் சிந்திக்கும் ஆற்றல் மிகவும் மிகுதி. மொழியறிவு, சமுதாய அறிவு, பல துறை அறிவு முதலிய பல வகைச் சிந்தனைத் திறன்கள் கொண்டிருப்பதால் விலங்குகளைவிட மனிதன் பலப்பல மடங்கு சிந்தனைத் திறனில் சிறந்து, விலங்குகளுடன் ஒப்பிட முடியாதபடி உயர்ந்து நிற்கிறான். எனவே விலங்குகளின் குறுகிய சிந்தனைத் திறனைப் பொருட்டாகக் கருதாமல் மனம் என்பதை மனிதனுக்கே உரிய சிறப்புப் பண்பாக கருதும் மரபு வந்துள்ளதாக உணரமுடிகிறது.

மனிதன், மனம் என்ற சொற்களுக்கு இடையே உள்ள தொடர்பாகக் கூறப்படுவதும் இங்கு கருதத் தக்கது. மநுஷ (Manusha - தமிழில் மனித) என்ற சமஸ்கிருதச் சொல் மநு (Manus, Manu) என்ற பெயரில் இருந்து வந்ததாகவும் இந்த மநு என்பது மநஸ் (மனம்) என்ற சிந்திக்கும் தன்மையைக் குறிப்பதாகவும் மோனியர் வில்லியம்சின் சமஸ்கிருத அகராதி குறிப்பிடுகிறது[22]. இது வைதிக அடிப்படை கொண்டது. மனம் உடையவன் மனிதன் என்பது இதன் கருத்து. மனம் என்பது மனிதனுக்கும் சில விலங்குகளுக்கும் உரியது எனக் கருதும் சமணத்துக்கு மாறுபட்டு அது மனிதனிடம் உயர்ந்து விளங்கும் ஒரு சிறப்பான பண்பு என வைதிகம் கொள்கிறது.

தொல்காப்பியர் கொள்கை

தொல்காப்பியர் வைதிகத்தை நன்கு அறிந்தவர். அவர் தனது நூலில் பல வைதிகக் கருத்துகளைக் கூறியுள்ளார். இது இக்கட்டுரையாசிரியர் எழுதிய, சங்ககாலத் தமிழரின் சமயம் – ஒரு மீளாய்வு’ என்ற கட்டுரையில் ‘தொல்காப்பியத்தில் வைதிகம்’ என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது[23]. மேலும் தொல்காப்பியரே ஒரு வைதிக முனிவர்தான் என்பது மேலே குறிப்பிடப்பட்ட, ‘படிமையோன் எனப்பட்ட தொல்காப்பியர்’ என்ற கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது[24]. எனவே வைதிகரான தொல்காப்பியர் கூறும் உயிர் வகைப்பாடானது சாங்கிய காரிகை, மனுதரும நூல், பகவத் கீதை முதலிய வைதிக நூல்களில் கூறியுள்ளபடி முற்றிலும் வைதிக மரபுப்படி அமைந்தது என்பதைத் தெளிவாக அறியலாம்.

“ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே”
(தொல். பொருள். 571)

என்றும்,

“மக்கள் தாமே ஆறறி வுயிரே பிறவும்
உளவே அக்கிளைப் பிறப்பே”
(தொல். பொருள். 577)

என்றும் கூறிய தொல்காப்பியர்,

“ஒருசார் விலங்கும் உளவென மொழிப”
(தொல். பொருள். 578)

என்று சில விலங்குகளுக்கும் ஆறறிவு உண்டு எனச் சொல்வார்கள் என்றும் கூறியுள்ளார். சமணம் சில விலங்குகளுக்கும் மன பலம் உள்ளது என்று

கூறுவதற்கும் இதற்கும் ஒற்றுமை உள்ளது போல் தோன்றினும் இரண்டும் ஒத்தவை அல்ல. ஏனெனில் சமணம் மனிதனும் விலங்கும் ஐந்தறிவு உயிர்கள் என்று கூறி சில விலங்குகளும் மன பலம் கொண்டவை எனக் கூறுகிறது. தொல்காப்பியர் மனிதன் ஆறறிவு உயிர் என்று கூறி சில விலங்குகளுக்கும் ஆறறிவு உண்டு எனச் சிலர் கூறுவர் என்று கூறுகிறார். விலங்குகளுக்கு உள்ள மன அறிவு சிறப்பு அற்றது எனக் கருதியே தொல்காப்பியர் இவ்வாறு மனிதனை ஆறறிவு உயிராகத் தன் கூற்றாகக் கூறி பிறர் கூற்றாக, சில விலங்குகளுக்கும் ஆறறிவு சிறிது உண்டு என்ற கருத்துபடுமாறு கூறியுள்ளார் என்று உணர முடிகிறது.

முடிவுரை

இங்கு விளக்கப்பட்ட ஆய்வில் இருந்து தொல்காப்பியர் கூறும் உயிர்களின் பாகுபாடு சமண முறைப்படி அமைந்ததாக அல்லாமல் சமணக் கொள்கைக்கு மாறுபட்டது என்பதையும், அது வைதிக மரபுப்படி அமைந்தது என்பதையும் தெளிவாக அறியலாம்.

மேற்கோள்கள்

1. தட்சணாமூர்த்தி, ந., படிமையோன் எனப்பட்ட தொல்காப்பியர், தமிழ் இலக்கியத்தில் மெய்யியலும் தத்துவமும் கருத்தரங்கம் 20.2.2026 (வ.எண். 51).
2. Illustrated Stananga Sutra – Part 1, 2004, Sutra 409, p. 157.
3. Mrs Sinclair Stevenson, The Heart of Jainism, 1970, p. 299-300.
4. Illustrated Samvayang Sutra, 2013, Sutra 92, p. 54 – 55.
5. Illustrated Stananga Sutra – Part 2, 2004, Fifth Sthan Sutra 176 p.185.
6. Ibid, Sutra 204 p. 201.
7. Jivajivabhigama Sutra – Part 1 (Text and Hindi translation), 1989. Sutra 31 p 76.
8. Illustrated Stananga Sutra – Part 2, 2004, Sthan 6 Sutra 6 p.222.
9. வையாபுரிப் பிள்ளை, எஸ்., தமிழ்ச் சுடர் மணிகள் (முதற் கோவை), 1949, பக். 15-16.
10. மேலது பக். 17.
11. Illustrated Samvayang Sutra, 2013, Sutra 92, p. 54–55.
12. Mrs Sinclair Stevenson, The Heart of Jainism, 1970, p. 299-300.
13. Nathmal Tatia (Tr), Tattvartha Sutra, 1994, p. 42-43.
14. Mrs Sinclair Stevenson, The Heart of Jainism, 1970, p. 95-96 &101.
15. Ibid 104 &105.
16. Ibid p. 299-300.
17. Illustrated Samvayang Sutra, 2013, Sutra 92, p. 54-55.
18. Ibid Sutra 33 p. 21.
19. Nathmal Tatia (Tr), Tattvartha Sutra, 1994, Sutra 2.22 p. 44.
20. வையாபுரிப் பிள்ளை, எஸ்., தமிழ்ச் சுடர் மணிகள் (முதற் கோவை), 1949, பக். 16.
21. Sh Chandra Banerji, Sankhya Karika with Goudapada's Scholia and Narayana's Gloss, 1898, p. 248.
22. Monier Williams., A Sanskrit – English Dictionary, 1872, p. 743.
23. தட்சணாமூர்த்தி, ந., சங்ககாலத் தமிழரின் சமயம் – ஒரு மீளாய்வு – முத்தரசி இணைய ஆய்விதழ்க் கட்டுரை - https://zenodo.org/records/17093296
24. தட்சணாமூர்த்தி, ந., படிமையோன் எனப்பட்ட தொல்காப்பியர், தமிழ் இலக்கியத்தில் மெய்யியலும் தத்துவமும் கருத்தரங்கம் 20.2.2026 (வ.எண். 51).

துணை நூல் பட்டியல்

1. ஆறுமுக நாவலர், நன்னூல் காண்டிகை உரை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1984 (நிழற்படப் பதிப்பு)
2. தட்சணாமூர்த்தி, ந., சங்ககாலத் தமிழரின் சமயம் – ஒரு மீளாய்வு – முத்தரசி இணைய ஆய்விதழ்க் கட்டுரை - https://zenodo.org/records/17093296
3. தட்சணாமூர்த்தி, ந., படிமையோன் எனப்பட்ட தொல்காப்பியர், தமிழ் இலக்கியத்தில் மெய்யியலும் தத்துவமும் கருத்தரங்கம் 20.2.2026 (வ.எண். 51), சரஸ்வதி நாராயணன் கல்லூரி, மதுரை.
4. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணம் (இரண்டாம் பகுதி), தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2003.
5. வையாபுரிப் பிள்ளை, எஸ்., தமிழ்ச் சுடர் மணிகள் (முதற் கோவை), குமரி மலர்க் காரியாலயம், சென்னை, 1949.
6. Alladi Mahadeva Sastry (Tr), The Baghavat Geeta with the commentary of Shri Sankaracharya, Samata Books, Madras, 1977 (7th edition).
7. Illustrated Samvayang Sutra, Padma Prakashan, Delhi, 2013.
8. Illustrated Stananga Sutra – Part 1, Padma Prakashan, Delhi, 2004.
9. Illustrated Stananga Sutra – Part 2, Padma Prakashan, Delhi, 2004.
10. Jivajivabhigama Sutra – Part 1 (Text and Hindi translation), Shri Agam Prakashan Samiti, Beawar, 1989.
11. Monier Williams., A Sanskrit – English Dictionary, Oxford Clarenton Press, London, 1872.
12. Mrs Sinclair Stevenson, The Heart of Jainism, Munshiram Manoharlal, New Delhi, 1970.
13. Nathmal Tatia (Tr), Tattvartha Sutra, Harper Collins Publishers, San Francisco USA, 1994.
14. Patrick Olivelle, Manu's Code of Law, Oxford University Press, Oxford, 2005.
15. Sh Chandra Banerji, Sankhya Karika with Goudapada's Scholia and Narayana's Gloss, Hare Press, Culcutta, 1898.